# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

***கிழமை இல. 15 - 2025***

## இவ்வார வளாக நிகழ்வுகள்!

- **அன்னை பூபதி நினைவுநாள்:**

இவ்வாரம் 11.04.2025 வெள்ளிக்கிழமை 18.45 மணிக்கும் 12.04.2025 சனிக்கிழமை 09:40 மணிக்கும் அன்னை பூபதி நினைவுநாள் பாடசாலையில் வகுப்பு நேரத்தில் நினைவுகூரப்படும்.

- **விளையாட்டு 2025 - தகவற்கூட்டம்**

விளையாட்டுப்போட்டி சார்ந்து அங்கத்தவர்கள் மற்றும் அங்கத்தவர்களின் பெற்றோர், பாதுகாவலருக்கான - தகவற் கூட்டம் 12.04.2025ம் திகதி 10:45 மணிக்கு 2ம் மாடி மண்டபத்தில் நடைபெறும்.

**விளையாட்டுப் போட்டிக்கு பதிவதற்கான விண்ணப்பப் படிவம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

**ஆண்டுத்திட்டத்தின்படி விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ள நாட்கள் விவரம்.**

1. ஞாயிறு 08.06.2025 - இல்லங்களுக்கிடையே தெரிவுப்போட்டி.
2. திங்கள் 09.06.2025 - குழை எடுத்தல் கிளித்தட்டு தெரிவுப்போட்டி
3. சனி 14.06.2025 - அரையிறுதி, கள இறுதிப் போட்டிகள்.
4. ஞாயிறு 15.06.2025 - 34ஆவது இல்லவிளையாட்டுப் போட்டிகள்.

- விளையாட்டுப் போட்டிக்கான குழு தெரிவுசெய்ய வேண்டும்.
- மாணவர்கள் இவ் விளையாட்டுப்போட்டியில் கலந்துகொள்வதற்கு முன் Tamilsk Barn og Ungdom Idrettsklubb (TBUK) இல் உறுப்பினராகப் பதிவுசெய்தல் வேண்டும். இவ்விடயம் சார்ந்த ஒரு படிவம் மற்றும் *PDF* விரைவில் அனுப்பிவைக்கப்படும்.
- விளையாட்டுப் போட்டிக்கான குழுவில் இணைந்து பணியாற்ற ஆர்வமுள்ளவர்கள் எம்மோடு தொடர்புகொள்ளவும்.

- **தேர்வுகள் நடைபெறும் நாள் விவரம்:**

- ஆண்டிறுதிப் புலன்மொழித்தேர்வு 25,26,27.04.2025 (வெள்ளி, சனி, ஞாயிறு)
- அனைத்துலகத் த.மே.பே புலன்மொழித்தேர்வு 10,11.05.2025 (சனி, ஞாயிறு)
- ஆண்டிறுதி பொதுத்தேர்வு 23,24,25.05.2025 (வெள்ளி, சனி, ஞாயிறு)
- அனைத்துலகத் தமிழ் ஆண்டிறுதி எழுத்துத்தேர்வு 07.06.2025 சனிக்கிழமை

### கண்காணிப்புக் கருவி பற்றிய தகவல்:

எமது பாடசாலையிலுள்ள கண்காணிப்புக் கருவியை, 23.03.2025 இலிருந்து அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் தலைமை நிர்வாகம் பொறுப்பேற்றுள்ளதை அறிவீர்கள்.

கடந்த 30.03.2025 அன்று நடைபெற்ற அன்னை தலைமையின் தகவற்கூட்டத்தில், எமது வளாகப் பெற்றோரால் முன்வைக்கப்பட்ட கருத்துகளை உள்வாங்கி, அன்னை தலைமை நிர்வாகம், 04.04.2025ம் திகதியிலிருந்து 2வது, 3வது தளங்களிலுள்ள வளாகத்தின் கண்காணிப்புக் கருவியை skan kontroll என்ற நிறுவனத்திடம் பொறுப்பினை வழங்கியுள்ளார்கள் என்பதனை அறியத்தருகின்றோம். கண்காணிப்பதற்கான நிறுவனப்பொறுப்பாளராக அன்னை இருக்கும்.
அனைத்து கண்காணிப்புக் கருவிகளும் skan kontroll நிறுவனத்திற்கானதாக மாற்றப்பட்டுள்ளன. கட்டிடத்தின் பகுதிகள் கண்காணிக்கப்படுகின்றது என்ற தகவலுக்கான எச்சரிக்கை இரண்டு மாடியிலும் தெளிவாக வழங்கப்பட்டுள்ளது. மேற்கூறிய நிறுவனத்துடன் இணைந்து அதற்குரிய வகையில் எமது நிறுவனம் கண்காணிப்புக் கருவியை கையாளும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

### கலை

கலை வகுப்புகள் வழமைபோல் வழங்கப்பட்ட நேரத்தில் நடைபெறும். மாற்றங்கள் இருப்பின் ஆசிரியர்கள் அறியத்தருவார்கள்.

**கலைப்பாடத் தேர்வு :** செய்முறைத்தேர்வு 11.05.2025 நடைபெறும்.

### சிற்றுண்டிச்சாலை - வழமைபோல் இயங்குநிலையில் இருக்கும்.

*தாங்கள் பயன்படுத்தும் உணவுப்பொருட்கள் அல்லது தேநீர் அருந்தும் கோப்பைகள் இருப்பின் அவற்றை அப்புறப்படுத்தி சுத்திகரித்துச் செல்லல் வேண்டும்.*

### நிதி

கட்டணங்களைச் செலுத்தும்படி வேண்டுகின்றோம். ஏற்கனவே செலுத்தியவர்கள் இத்தகவலை விலத்திச்செல்லவும்.

**குறிப்பு: அன்னை தலைமை மற்றும் எம்மால் வழங்கப்பட்ட கட்டண அறவீடுகள் முழுமையாகச் செலுத்தியவர்கள் மட்டுமே அங்கத்துவத்துவ உரிமையினை உறுதிப்படுத்தியவர்கள் என்பதனை அறியத்தருகின்றோம். மேலதிக விவரம் தேவைப்படின் எம்மைத் தொடர்புகொள்ளவும்.**

### வளாகத்தில் அடுத்துவரும் முக்கிய நிகழ்வுகள்

தமிழின அழிப்பு 16 ஆம் ஆண்டு நினைவுநாள் - 18.05.2025 ஞாயிறு

**இக்கல்வியாண்டின் இறுதிநாள் - 15.06.2025**

**முக்கிய கவனம்!!**

1. *கற்பித்தல் நேரத்தில் மாணவர்களுக்கு, ஆசிரியர்களுக்கு எந்த இடையூறும் விளைவிக்காதவண்ணம் பெற்றோர் பாதுகாவலர்கள் கவனத்தில் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.*

2. **பாலூட்டும் தாய்மார்கள் தேவை ஏற்படும் போது 306ம் இலக்க அறையைப் பாவிக்கலாம். நிருவாகத்திடம் கேட்டால் அதற்கான ஒழுங்குகள் செய்து தரப்படும்.**

கற்பித்தல் நேரத்தில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையூறு ஏற்படாமல் இருப்பதற்கு, புரிந்துணர்வுடன் பணியாற்றிவரும் அனைத்துப் பெற்றோர் பிரதிநிதிகள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கு எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

***எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது ஐயப்பாடுகள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.
தொலைபேசி இல. 004740076104.***

நன்றி!

நிர்வாகம் - றொம்மன் வளாகம்
அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்.